RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 207 | ஆகஸ்டு.2 2026 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5





■ மதுரை மாநகராட்சி, அண்ணா நகர் 9வது கிழக்குத் தெருவில் தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 குறித்து வீட்டுப்பட்டியல் மற்றும் வீட்டுவசதி கணக்கெடுப்பு பணிகள் கணக்கெடுப்பாளர்கள் மூலம் நடைபெற்றதை மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார், இ.ஆ.ப., நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# மதுரை அருகே தரமற்ற சாலைப் பணி: 500 மீட்டர் தார் சாலை அகற்ற கலெக்டர் அதிரடி உத்தரவு

## ஆய்வில் தரக்குறைவு உறுதி - புதிதாக சாலை அமைக்க ஒப்பந்ததாரருக்கு மாவட்ட நிர்வாகம் உத்தரவு

மதுரை, ஆக.2-

மதுரை மாவட்டம் ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் அமைக்கப்பட்டிருந்த 500 மீட்டர் நீள தார் சாலையில் தரக்குறைவு இருப்பது மாவட்ட நிர்வாகத்தின் ஆய்வில் உறுதியானதைத் தொடர்ந்து, அந்தச் சாலையை முழுமையாக அகற்றி மீண்டும் புதிதாக அமைக்க மாவட்ட ஆட்சியர் நிஷாந்த் கிருஷ்ணா உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஜூலை 27ஆம் தேதி ஆய்வு செய்யப்பட்ட சாலையில், மறுநாள் வாகனங்கள் இயக்கப்பட்டதால் சேதம் ஏற்பட்டதாக ஒப்பந்ததாரர் விளக்கம் அளித்தார். இருப்பினும், சாலை தரம் குறித்த புகாரைத் தொடர்ந்து அதிகாரிகள் மேற்கொண்ட விரிவான ஆய்வில், முறையான கியூரிங் (Curing) உள்ளிட்ட தொழில்நுட்ப நடைமுறைகள் பின்பற்றப்படாதது தெரியவந்தது.

இதையடுத்து, தரமற்ற 500 மீட்டர் சாலையை முழுமையாக அகற்றிவிட்டு, விதிமுறைகளுக்கு ஏற்ப புதிய தார் சாலையை அமைக்க ஒப்பந்ததாரருக்கு மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், எதிர்காலத்தில் இதுபோன்ற தரக்குறைவான பணிகள் நடைபெறாமல் இருக்க அனைத்து பணிகளையும் தீவிரமாக கண்காணிக்கவும், பொதுமக்களின் புகார்களுக்கு உடனடி நடவடிக்கை எடுக்கவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.



■ கன்னியாகுமரி மாவட்டம் ஆரல்வாய்மொழி கூட்டுறவு நூற்பாலையில் அமைச்சர் ஆய்வு அங்குள்ள பணியாளர்களிடம் குறைகளை கேட்டறிந்தார். கடந்த காலங்களில் சரியான முறையில் நூற்பாலைகளை இயக்காததால் நஷ்டம் ஏற்பட்டுள்ளது தெரிய வருகிறது, தற்போது முதல்வர் விஜய் தலைமையிலான ஆட்சியில் நூற்பாலைகள் தரம் உயர்த்தி லாபகரமாக இயக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம் மேலும் தொழிலாளர்களுக்கான பணி நிரந்தரம் செய்ய முதல்வர் நடவடிக்கை எடுப்பார் என கன்னியாகுமரி மாவட்டம் ஆரல்வாய்மொழி கூட்டுறவு நூற்பாலையை ஆய்வு செய்த பின்பு கைத்தறி அமைச்சர் விஜய் பாலாஜி செய்தியாளர்களுக்கு பேட்டி மேலும் காவிரி நீர் மேலாண்மை ஆணையம் உத்தரவிட்ட கேள்வி குறித்து, அமைச்சர் துறை சார்ந்த கேள்விகள் மட்டும் தான் பதிலளிக்கிறேன் என்று மலுப்பலாக தெரிவித்து சென்றார்.






# உதகை வடக்கு (கிழக்கு) ஒன்றிய தி.மு.க மற்றும் சோலூர் பேரூர் கழக செயல்வீரர்கள் கூட்டம்

உதகை, ஆக.2-

நீலகிரி மாவட்டம், உதகை வடக்கு (கிழக்கு) ஒன்றிய தி.மு.க சோலூர் பேரூர் கழக திமுக செயல்வீரர்கள் கூட்டம் கக்குசியில் மாவட்ட கழக பொறுப்பாளர் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே.எம். ராஜூ தலைமையில் நடைபெற்றது.

உதகை வடக்கு (கிழக்கு) ஒன்றிய செயலாளர் காமராஜ் வரவேற்று பேசினார், மாவட்ட அவைத் தலைவர் போஜன், சோலூர் பேரூர் செயலாளர் பிரகாஷ்குமார், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் மகேஷ், மோகன்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், வரும் உள்ளாட்சி தேர்தலில், நூறு சதவீதம் வெற்றி பெற அயராது உழைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில், மாவட்ட பிரதிநிதிகள் பசவன், போஜன், அணிகளின் துணை அமைப்பாளர்கள் TK மூர்த்தி, செல்வன், ஜோகி, காளி, நஞ்சன் உட்பட அணிகளின் நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

கூட்டம் முடிவில் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் விவேக் நன்றி கூறினார்.

# சிற்றுந்து உரிமையாளர்களின் கோரிக்கைகளை ஏற்ற அதிகாரிகள் ஆட்டோ, மினி பஸ் இயக்கத்தில் புதிய ஒழுங்குமுறை





மதுரை, ஆக.2-

மதுரை மாட்டுத்தாவணி ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தில் சிற்றுந்து (மினி பஸ்) உரிமையாளர்களுக்கும், ஆட்டோ ஓட்டுநர்களுக்கும் இடையே வாகன நிறுத்தம் தொடர்பாக ஏற்பட்டிருந்த பிரச்சினை, அதிகாரிகள் நடத்திய பேச்சுவார்த்தையில் சுமூகமாக முடிவுக்கு வந்தது.

மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் தொடங்கப்பட்ட 2000ம் ஆண்டு முதல், அரசுப் பேருந்துகளுடன் சிற்றுந்துகளும் குறிப்பிட்ட நடைமேடைகளில் நின்று பயணிகளை ஏற்றி இறக்கி வருகின்றன. ஒரு சிற்றுந்தின் இயக்கத்தை நம்பி ஓட்டுநர், நடத்துநர், பராமரிப்புப் பணியாளர்கள் உள்பட பல குடும்பங்கள் வாழ்வாதாரம் நடத்தி வருவதால், தங்களது சட்டப்பூர்வ உரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்று சிற்றுந்து உரிமையாளர்கள் வலியுறுத்தினர்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக சட்டமன்ற உறுப்பினர் கல்லாணை, வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் சித்ரா, சிங்காரவேலன் மற்றும் போக்குவரத்து காவல் உதவி ஆணையர் முன்னிலையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் சிற்றுந்து உரிமையாளர்கள் சங்கத் தலைவர் கண்ணன், சங்க நிர்வாகிகள் மற்றும் ஆட்டோ தொழிற்சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் பேசிய சங்கத் தலைவர் கண்ணன், அரசுப் பேருந்துகளும், தனியார் பேருந்துகளும் ஒரே நடைமேடையில் இயங்குவது போலவே சிற்றுந்துகளும் தொடர்ந்து இயக்கப்பட வேண்டும் என்றும், மனிதாபிமான அடிப்படையில் ஆட்டோக்களுக்கு இடம் வழங்குவதில் தங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றாலும், அதனால் சிற்றுந்து சேவை பாதிக்கப்படக் கூடாது என்றும் வலியுறுத்தினார். மேலும், பெரியார் பேருந்து நிலையத்தில் நடைமுறையில் உள்ள ஒழுங்குமுறைகளைப் போலவே மாட்டுத்தாவணியிலும் செயல்படுத்த தாங்கள் தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

இருதரப்பு கருத்துகளையும் கேட்ட அதிகாரிகள், சிற்றுந்துகளின் சட்டப்பூர்வ உரிமை பாதிக்கப்படாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தனர். மேலும், பேருந்து நிலையத்தில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க 10 நிமிட இடைவெளி அடிப்படையில் வாகனங்களை இயக்கவும், சிற்றுந்துகள் வழக்கமான நடைமேடைகளில் தொடர்ந்து இயங்கவும், ஆட்டோக்களுக்கு மாற்று இடங்களை ஒழுங்குபடுத்தவும் முடிவு செய்யப்பட்டது.

பேச்சுவார்த்தையின் முடிவில், இருதரப்பினரும் சுமூகமாக இணைந்து செயல்பட ஒப்புக் கொண்டனர். இதன் மூலம் மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தில் நிலவி வந்த பதற்றம் நீங்கி, பயணிகளுக்கு இடையூறு இல்லாத போக்குவரத்து சேவை தொடரும் நிலை ஏற்பட்டுள்ளது.



# ஆடிப்பெருக்கையொட்டி கிருஷ்ணகிரி அணையில் இருந்து விநாடிக்கு 985 கனஅடி தண்ணீர் திறப்பு

கிருஷ்ணகிரி, ஆக.2-

ஆடிப்பெருக்கையொட்டி கிருஷ்ணகிரி அணையில் இருந்து விநாடிக்கு 985 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது.

தென்பெண்ணை நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்யும் மழை மற்றும் கெலவரப்பள்ளி அணையில் திறந்துவிடப்படும் நீரின் அளவை பொறுத்து, கிருஷ்ணகிரி அணைக்கு நீர்வரத்து குறைந்தும், அதிகரித்தும் வருகிறது. அதன்படி, கிருஷ்ணகிரி அணைக்கு நேற்று முன்தினம் விநாடிக்கு 181 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை 161 கனஅடியாக சரிந்தது. அணையின் மொத்த உயரமான 52 அடியில், தற்போது நீர்மட்டம் 48.35 அடியாக உள்ளது. அணையில் இருந்து வலது மற்றும் இடது புறக்கால்வாய்கள் வழியாக 162 கனஅடியும், தென்பெண்ணை ஆற்றில் விநாடிக்கு 823 கனஅடி என மொத்தம் 985 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

இது குறித்து பொதுமக்கள் சிலர் கூறுகையில், ஆடிப்பெருக்கு விழா, தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கொண்டாப்படுவது வழக்கம். அன்றைய தினம் தென்பெண்ணை ஆற்றங்கரையில் பொதுமக்கள் புனிதநீராடி சுவாமியை வழிப்படுவது வழக்கம். இந்நிலையில், தென்பெண்ணை ஆற்றில் திறந்துவிடப்படும் நீரின் அளவு குறைவாக இருந்தது. இதனிடையே பெண்ணேஸ்வரமடம், நெடுங்கல், அகரம், மஞ்சமேடு, தர்மபுரி மாவட்டம் இருமத்தூர், தர்மபுரி, திருவண்ணமாலை மாவட்ட எல்லையில் உள்ள அம்மாப்பேட்டை நீப்பத்துறை உள்ளிட்ட இடங்களில் பக்தர்கள் அதிகளவில் திரண்டு, ஆற்றில் புனிதநீராடும் வகையில், கிருஷ்ணகிரி அணையில் இருந்து கடந்த 29ம் தேதி விநாடிக்கு 226 கனஅடியும், நேற்று முன்தினம் 473 கனஅடியும், நேற்று (31ம் தேதி) 823 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. ஆடிப்பெருக்கு நாளில், ஆற்றில் தண்ணீர் செல்வதால், பக்தர்கள் சிரமமின்றி புனித நீராடலாம், என்றனர்.







# தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் ஆவின் நிறுவனத்தில் பால்கொள்முதல் தொடர்பான ஆலோசனைக்கூட்டம்

தேனி, ஆக.2-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் ஆவின் நிறுவனத்தில் பால்கொள்முதல் அபிவிருத்தி செய்யும் பொருட்டு பால் உற்பத்தியாளர்களுக்கு கறவை மாட்டுக்கடன் வழங்குவது தொடர்பான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பால் உற்பத்தியாளர்கள் வங்கிகள் மூலம் கடனுதவி பெற்று பயனடையும் வகையில், மாவட்ட ஆட்சித்தலைவர் தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்கினார்.

மேலும், பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பெறப்பட்டுள்ள 372 விண்ணப்பங்களின் அடிப்படையில், விண்ணப்பதாரர் ஒருவருக்கு தலா இரண்டு கறவை மாடுகள் வழங்கும் வகையில், தோராயமாக 744 கறவை மாடுகள் வாங்குவதற்கு கடன்வசதி ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தலின்படி, கடனுதவி வழங்கப்பட்டால் தேனி மாவட்டத்தில் நாளொன்றுக்கு தோராயமாக 5,000 லிட்டர் பால் உற்பத்தி அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. இக்கூட்டத்தில் மாவட்ட மாவட்ட வருவாய் அலுவலர்.ப.ராஜகுமார், இணைப்பதிவாளர் (கூட்டுறவுத்துறை) நர்மதா, இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்புத்துறை) கிரிஜா, துணைப்பதிவாளர் (பால்வளம்). வெங்கடேசன், ஆவின் பொதுமேலாளர்.ரமேஷ் மற்றும் வங்கி மேலாளர்கள், கால்நடைத்துறை அலுவலர்கள், கூட்டுறவுத்துறை அலுவலர்கள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# தமிழகம் முழுவதும் மக்கள் தொகை கணக்கெடுக்கும் பணி துவங்கியது




சென்னை, ஆக.02-

தமிழ்நாடு முழுவதும் மக்கள் தொகை கணக்கெடுக்கும் பணி துவங்கி உள்ளது. இந்த பணியில் ஈடுபட்டுள்ள 1 லட்சத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள், வீடு வீடாக சென்று மக்கள் தொகை கணக்கெடுக்கும் பணியில் ஈடுபட்டு உள்ளனர்.

தமிழ்நாடு முழுவதும் முதல் கட்ட வீடுகள் கணக்கெடுப்பு மற்றும் பட்டியலிடும் பணி இன்று அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி இருக்கிறது. ஆகஸ்ட் 30 வரை நடைபெறும் இப்பணியில் 1.15 லட்சத்திற்கும் மேற்பட்ட கணக்கெடுப்பாளர்கள் மற்றும் 19,000 மேற்பார்வையாளர்கள் வீடு வீடாகச் சென்று முழுமையாக டிஜிட்டல் முறையில் மக்களிடம் தரவுகளைச் சேகரிக்க உள்ளனர்.

வீட்டு வசதிகள் மற்றும் சொத்து விவரங்கள் குறித்த 33 கேள்விகள் கொண்ட அட்டவணை இந்த பணியில் பயன்படுத்தப்படுகிறது. அதே போல ஆன்லைனில் ஏற்கனவே பதிவு செய்தவர்கள் தங்களின் தனித்துவ அடையாள எண்ணை (Self-enumeration ID) கணக்கெடுப்பாளரிடம் வழங்கலாம். இது தொடர்பாக தகவல் தெரிவித்துள்ள அதிகா ரிகள், 1948ம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்புச் சட்டப்படி, சேகரிக்கப்படும் தகவல்கள் ரகசியமாக வைக்கப்படும் என்று குறிப்பிட்டு உள்ளனர். அதே போல வீட்டுவசதி நிலை மற்றும் அடிப்படை வசதிகள் குறித்த தரவுகளைச் சேகரிக்கும் இந்த தேசியப் பணியில் பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் அதிகாரிகள் கேட்டு கொண்டுள்ளனர்.

# செங்கல்பட்டில் ஆகஸ்ட் 10ல் பிரதம மந்திரி தேசிய தொழிற்பழகுநர் முகாம்

செங்கல்பட்டு, ஆக.2-

செங்கல்பட்டு மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம் சார்பில் PM National Apprenticeship Mela (PM-NAM) வரும் 10.08.2026 (திங்கட்கிழமை) காலை 10.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை செங்கல்பட்டு அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெறுகிறது.

மத்திய, மாநில அரசு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்புகள் பங்கேற்கும் இந்த முகாமில், ITI தேர்ச்சி பெற்ற அனைத்து தொழிற்பிரிவு பயிற்சியாளர்களும் கலந்து கொண்டு தொழிற்பழகுநர் பயிற்சியில் சேரலாம். பயிற்சியை வெற்றிகரமாக முடிப்போருக்கு NAC (National Apprenticeship Certificate) சான்றிதழ் வழங்கப்படும். இந்தச் சான்றிதழ் பெற்றவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை மற்றும் வயது வரம்பில் சலுகை வழங்கப்படும்.

எனவே, தகுதியான மாணவ, மாணவியர்கள் அனைத்து கல்விச் சான்றிதழ்களுடன் முகாமில் கலந்து கொண்டு பயனடையுமாறு மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம் கேட்டுக்கொண்டுள்ளது.



# முதல்வர் பதக்கம் வழங்கும் விழாவில் போலீஸ் குடும்பத்தினர் மகிழ்ச்சி

சென்னை, ஆக.02-

தமிழக காவல்துறையில் சிறப்பாக பணியாற்றிய அதிகாரிகள், போலீஸாருக்கு குடியரசுத் தலைவர், மத்திய உள்துறை அமைச்சர் மற்றும் தமிழக முதல்வர் பதக்கங்கள் வழங்கும் விழா, சென்னை எழும்பூரில் உள்ள ராஜரத்தினம் மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்றது. இந்த விழாவில் முதல்வர் விஜய் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பதக்கங்களை வழங்கினார்.

இந்த நிகழ்வில், மெய் சிலிர்க்க வைக்கும் வகையில் இருசக்கர வாகன சாகச நிகழ்ச்சி நடைபெற்றது. இதற்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் அன்பரசி தலைமை தாங்கி பாராட்டுகளை பெற்றார். ஆண் காவலர்களும் பல்வேறு வகையான சாகசங்களில் ஈடுபட்டு கைதட்டுகளை குவித்தனர்.

50க்கும் மேற்பட்ட போலீஸார் துப்பாக்கிகளை கையில் சுழற்றியபடி இங்கும், அங்குமாக சென்று பார்வையாளர்களின் பாராட்டுகளை பெற்றனர். ஒவ்வொரு நிகழ்வுகளின் போதும் பின்னணியில் முதல்வர் நடித்த விஜய் திரைப்படங்களின் பாடல்கள் ஒலித்தன.

நிகழ்ச்சி முடிந்து முதல்வர் புறப்பட்டு சென்ற உடன் பதக்கம் பெற்றவர்கள் தாங்கள் பெற்ற பதக்கங்களுடன் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் போட்டோ, செல்பி, வீடியோ எடுத்து மகிழ்ந்தனர். முன்னதாக நிகழ்ச்சி நடைபெற்ற ராஜரத்தினம் அரங்கத்தில் ஆயிரக்கணக்கானோர் திரண்டிருந்தனர்.

நிகழ்ச்சியை ஆங்காங்கே காணும் வகையில் டிஜிட்டல் திரை அமைக்கப்பட்டிருந்தது. அதில், முதல்வர் முகம் காண்பிக்கும்போதெல்லாம் அனைவரும் உற்சாக கோஷமிட்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஆயுதப்படை கூடுதல் டிஜிபி தினகரன் சிறப்பாக செய்திருந்தார்.

பதக்கம் பெற்றவர்கள் ஏமாற்றம்

பதக்கம் பெறுபவர்கள் அனைவருக்கும் முதல்வர் விஜய் அவரது கைகளாலேயே பதக்கங்களை வழங்குவார் என ஆவலுடன் எதிர்பார்த்தனர். இந்த காட்சிகளை காணவும், மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வதற்கும் தங்களது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களை அழைத்து வந்தனர்.

ஆனால், 72 பேருக்கு மட்டுமே முதல்வர் பதக்கம் கொடுத்தார். முதல்வர் கையால் பதக்கம் பெற முடியாத வருத்தம், ஏமாற்றம் ஒரு பக்கம் இருந்தாலும், விழாவில் முதல்வரைப் பார்த்த மகிழ்ச்சியை போலீஸார் மற்றும் அவர்களது குடும்பத்தினரிடம் காண முடிந்தது.

# திருப்பரங்குன்றம் தீபம் வழக்கு: தமிழக அரசின் மேல் முறையீட்டு மனு ஆக.3ல் உச்ச நீதிமன்றத்தில் விசாரணை

சென்னை, ஆக.03-

திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத்தூணில் ஆண்டுதோறும் திருக்கார்த்திகை நாளன்று தீபம் ஏற்ற வேண்டுமென்ற சென்னை உயர் நீதிமன்ற உத்தரவை எதிர்த்து தமிழக அரசு தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு உச்ச நீதிமன்றத்தில் திங்கட்கிழமை விசாரணைக்கு வரவுள்ளது.

திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத்தூணில் கடந்தாண்டு டிச.3ம் தேதி தீபம் ஏற்றக்கோரி மதுரையைச் சேர்ந்த ராமரவிகுமார் உள்ளிட்டோர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனுத்தாக்கல் செய்தனர். அந்த மனுக்களை விசாரித்த சென்னை உயர்நீதிமன்ற தனி நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், தீபத்தூணில் கார்த்திகை திருநாள் அன்று தீபம் ஏற்ற வேண்டுமென கடந்த 2025 டிச.1ல் உத்தரவிட்டார்.

ஆனால், இந்த உத்தரவு நிறைவேற்றப்படாத நிலையில்,மதுரை மாவட்ட ஆட்சியர், மாநகர் காவல் ஆணையர் மற்றும் கோயில் செயல் அலுவலர்ஆகியோருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது. இதையடுத்து ஆட்சியர், காவல் ஆணையர், செயல் அலுவலர் ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜராகி நீதிமன்ற தீர்ப்பை நிறைவேற்றாததற்காக வருத்தம் தெரிவித்தனர்.

இதனைதொடர்ந்து, தனி நீதிபதி உத்தரவை எதிர்த்து தமிழ்நாடு அரசும், அவமதிப்பு நடவடிக்கையை எதிர்த்து அதிகாரிகளும் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மேல்முறையீடு செய்தனர். அந்த மேல்முறையீட்டு மனுக்களை விசாரித்த மதுரை அமர்வு,அதிகாரிகளுக்கு எதிரான நீதிமன்ற நடவடிக்கைக்கு தடைவிதித்து உத்தரவிட்டது.

அதே வேளையில், ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை திருநாளன்று திருப்பரங்குன்றம் மலையில் உள்ள தீபத்தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என்று தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவை உறுதி செய்தது.இதனையடுத்து, தனி நீதிபதியின் உத்தரவை உறுதி செய்து மதுரை அமர்வு பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக கோயில் நிர்வாகம் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

அதுபோல, திருப்பரங்குன்றம் தீபம் விவகாரத்தில் பிரதான மனுதாரரான ராம ரவிக்குமார் சார்பில், மதுரை அமர்வின் இருநீதிபதிகள் அமர்வு பிறப்பித்த உத்தரவில் இடம் பெற்றுள்ள மலை உச்சிய உள்ள தீபத்தூணில் தீபம் ஏற்ற எத்தனை பேரை அனுமதிக்கலாம் என்பது குறித்து தொல்லியல் துறை யுடன் ஆலோசித்து முடிவெடுக்க வேண்டும் என்பது உள்ளிட்டநிபந்தனைகளை நீக்கக் கோரி மேல் முறையீடு செய்யப்பட்டது.

இந்த மனுக்கள் உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகள் அரவிந்த்குமார், விபுல்.எம்.பஞ்சோலி ஆகியோர் அடங்கிய அமர்வில் ஆக.3ல் விசாரணைக்கு வருகிறது.

# தமிழகத்தில் நடப்பு ஆண்டில் நாய்க்கடியால் 4.68 லட்சம் பேர் பாதிப்பு

சென்னை, ஆக.03-

தமிழகத்தில் நடப்பு ஆண்டில் நாய்க்கடியால் 4.68 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழகம் முழுவதும் 25 லட்சத்துக்கும் மேற்பட்ட ஒரு நாய்கள் இருக்கலாம் என்று உத்தேச புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. சென்னை போன்ற பெரு நகரங்களில் மட்டுமே ஒரு நாய்களுக்கு ஓரளவு தடுப்பூசி போடப்படுகிறது. கிராமப்புறங்களில் நாய்களுக்கு எவ்வித தடுப்பூசியும் போடாததால், நகரப் பகுதியைவிட, கிராமப்புறங்களில் நாய்க்கடி பாதிப்பு அதிகம் உள்ளது.

அதன்படி, நடப்பு ஆண்டில் சேலத்தில் 28,166 பேர் பாதிக்கப்பட்டு 3 பேர் உயிரிழந்தனர். கடலூரில், 22,113 பேர் பாதிக்கப்பட்டு 3 பேர் உயிரிழந்தனர். சென்னையில் 9,229 பேர் பாதிக்கப்பட்டு 3 பேர் உயிரிழந்தனர். திருநெல்வேலியில் 23,095 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மொத்தமாக தமிழகம் முழுவதும் 4.68 லட்சம் பேர் நாய்க்கடியால் பாதிக்கப்பட்டு 24 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதுகுறித்து பொது சுகாதாரத் துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, "தமிழகத்தில் கடந்த ஆண்டில் இதே காலகட்டத்தில் நாய்க்கடி பாதிப்பால் 6.26 லட்சம் பேர் பாதிக்கப்பட்டு, 34 பேர் ரேபிஸ் நோயால் உயிரிழந்தனர். கடந்த ஆண்டைவிட நாய்க்கடி பாதிப்பு குறைந்துள்ளது" என்றனர்.

# மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் : பயனாளிகள் நன்றி

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் தன்னம்பிக்கையுடன், சுயசார்புடன் மற்றும் சமூகத்தின் பிரதான நீரோட்டத்தில் இணைந்து வாழ்வதை உறுதி செய்யும் நோக்கில் பல்வேறு நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. கல்வி, வேலைவாய்ப்பு, திறன் மேம்பாடு, உதவி உபகரணங்கள், மருத்துவ உதவிகள் மற்றும் மறுவாழ்வு சேவைகள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மூலம் மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பணியில் இத்துறை தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.



அதன் தொடர்ச்சியாக, கடந்த 3 மாதங்களில் மதுரை மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் பல்வேறு முக்கிய நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. பார்வையற்றோர் மற்றும் வாய், காது பேச இயலாத 102 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.13,800 மதிப்பிலான நவீன ஸ்மார்ட்போன்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் அவர்கள் கல்வி, அரசு சேவைகள், வேலைவாய்ப்பு தகவல்கள் மற்றும் தகவல் தொடர்பு வசதிகளை எளிதாகப் பயன்படுத்தும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

மேலும், முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்ட 14 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.1,14,500 மதிப்பிலான இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வாகனங்கள் வழங்கப்பட்டு, அவர்களின் சுயமாகச் செல்லும் திறனும் வாழ்வாதார வாய்ப்புகளும் மேம்படுத்தப்பட்டுள்ளன.

அதேபோல், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 14 மாற்றுத்திறனாளிகளுக்கு மொத்தம் ரூ.15.29 லட்சம் மதிப்பில் செயற்கைக் கால்கள் பொருத்தப்பட்டு, அவர்கள் மீண்டும் தன்னம்பிக்கையுடன் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பும் வகையில் மறுவாழ்வு உதவி வழங்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று மாதங்களில் செயல்படுத்தப்பட்ட இந்த நலத்திட்டங்கள். மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதோடு. அவர்களின் சுயநிறைவு, சமூகப் பங்கேற்பு மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் உறுதுணையாக அமைந்துள்ளன.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்ற பயனாளி திரு.சக்திகணேஷ் தெரிவிக்கையில்,

"என் பெயர் சக்திகணேஷ். நான் மதுரை மாவட்டம், திருமங்கலத்தைச் சேர்ந்த தண்டுவடம் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி. இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வாகனம் வழங்குமாறு மாவட்ட நிர்வாகத்திடம் விண்ணப்பித்திருந்தேன். எனது விண்ணப்பத்தை விரைந்து பரிசீலித்து, மாவட்ட நிர்வாகத்தின் மூலம் எனக்கு மூன்று சக்கர வாகனம் வழங்கப்பட்டது. இந்த வாகனம் கிடைத்த பிறகு, எனது அன்றாடப் பயணங்களை சுயமாக மேற்கொள்ள முடிகிறது. குறிப்பாக, தற்போது இந்த வாகனத்தைப் பயன்படுத்தி தினமும் வேலைக்குச் சென்று வருகிறேன். இதனால் எனது வாழ்வாதாரத்தைத் தொடரவும், பிறரை சாராமல் சுதந்திரமாக இயங்கவும் மிகவும் உதவியாக உள்ளது. எனது வாழ்க்கையில் தன்னம்பிக்கையையும், சுயசார்பையும் ஏற்படுத்திய இந்த நலத்திட்ட உதவியை



வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றும் மாவட்ட நிர்வாகத்திற்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

வெளியீடு:
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
மதுரை.

# கிருஷ்ணகிரி நகராட்சியில் ரூ.50.38 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்ட பணிகளை கலெக்டர் நேரில் ஆய்வு

கிருஷ்ணகிரி, ஆக.2-

கிருஷ்ணகிரி நகராட்சியில் ரூ.50.38 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்ட பணிகளை கலெக்டர் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.



கிருஷ்ணகிரி நகராட்சியில் பழையபேட்டை, நேதாஜி சாலை, திருவண்ணாமலை சாலை, ராசு வீதி பகுதியில் இரண்டாம் கட்டமாக நடைபெற்று வரும் பாதாள சாக்கடை திட்ட பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இது குறித்து அவர் கூறுகையில், கிருஷ்ணகிரி நகராட்சி மொத்தம் 33 வார்டுகள் உள்ளன. அவற்றில் 16 வார்டுகளில் ரூ.18 கோடியே 24 லட்சம் மதிப்பில் 42.96 கி.மீ தூரத்திற்கு முதல் கட்டமாக பாதாள சாக்கடை திட்ட பணிகள் முடிக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. அதனைத் தொடர்ந்து தற்போது இரண்டாம் கட்டமாக 19 வார்டுகள் பயன்பெறும் வகையில் ரூ.49 கோடியே 86 லட்சம் மதிப்பில் பாதாள சாக்கடை திட்ட பணிகள் துவங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தில் கழிவுநீர் சேகரிப்பு கட்டமைப்பாக 110 மி.மீ முதல் 450 மி.மீ வரை விட்டமுள்ள பிவிசி பைப மற்றம் எச்டிபிஇ குழாய்கள் 52.09 கி.மீ நீளத்திற்க பதிக்கப்பட்டு, 2481 இயந்திர இறங்கு குழிகள் அமைக்கப்பட உள்ளன. இவற்றின் மூலம் சேகரிக்கப்படும் கழிவுநீர் 3 கழிவுநீர் உந்து நிலையங்கள் மூலமாக உந்தப்பட்டு, ஒரு சுத்திகரிப்பு நிலையமான தேவசமுத்திரம் ஏரியின் அருகில் அமைக்கப்பட்டுள்ள 9.00 எம்எல்டி சுத்திகரிப்பு திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் மூலம் சுத்திகரிப்பு செய்யப்பட உள்ளது. சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் குழாய்கள் மூலம் அருகில் அமைந்துள்ள தேவசமுத்திரம் ஏரிக்கு உந்தப்பட்டு பாதுகாப்பாக வெளியேற்றப்பட உள்ளது. மேலும், இந்த பணிகளை விரைந்து முடிக்க நகராட்சி அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், திருவண்ணாமலை சாலை, ராசு வீதி பகுதியில், நீர் உந்தும் மையம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

தொடர்ந்து கிருஷ்ணகிரி நகராட்சி, பழையபேட்டை, கொத்தபேட்டா பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான வளாகத்தில், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ், மக்கும் குப்பைகளை தரம் பிரிக்கும் பணிகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கிருஷ்ணகிரி நகராட்சியில் உள்ள 4 கோட்டங்களில், நாளொன்றுக்கு மக்கும் குப்பை 13 மெட்ரிக் டன்னும், மக்கா குப்பை 10 மெட்ரிக் டன் என மொத்தம் 23 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரிக்கப்பட்டு மக்கும் குப்பைகளை உரமாகவும், மக்கா குப்பைகளை தரம் பிரிக்கப்பட்டு சிமெண்ட் ஆலைக்கு அனுப்பப்படுகிறது.

தொடர்ந்து கிருஷ்ணகிரி நகராட்சி பழையபேட்டை, கொத்தபேட்டா பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான வளாகத்தில், ரூ.52 லட்சம் மதிப்பில் சமூக நாய்கள் கருத்தடை செய்வதற்கான அறுவை சிகிச்சை மையம் கட்டப்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரி நகராட்சியில் 1,086 நாய்கள் கணக்கெடுப்பு செய்யப்பட்டு, வெறிநாய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. மேலும் 55 நாய்களுக்கு கருத்தடை செய்யப்பட்டுள்ளது. பழையபேட்டை, நேதாஜி சாலை, ஆர்எம் நகரில் நகர்ப்புற பசுமை திட்டத்தின் கீழ், வேப்பம், மகா கனி, புங்கன், நாவல் உள்ளிட்ட 100 மரக்கன்றுகளை நகராட்சி நடுநிலைப்பள்ளி நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்களை கொண்டு நடவு செய்யப்பட்டது என்றார்.

தொடர்ந்து மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில், ஓசூர் மாநகராட்சி, கிருஷ்ணகிரி நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் நடைபெற்று வரும் திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடந்தது.

இந்த ஆய்வின் போது, ஓசூர் மாநகராட்சி ஆணையாளர் முகமது ஷபீர் ஆலம், கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையாளர் சேகர், நகரமைப்பு ஆய்வாளர்கள் மலர்விழி, கவிபிரகாஷ், துப்புரவு ஆய்வாளர்கள் ராமச்சந்திரன், சீனிவாசலு, வடிவேலு, உதவி பொறியாளர் ராமபிரகாஷ், பணி மேற்பார்வையாளர் பாலமுருகன் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# மேகேதாட்டு அணை கட்ட எதிர்ப்பு: தஞ்சையில் இந்திய கம்யூனிஸ்ட் ஆர்ப்பாட்டம்

தஞ்சாவூர், ஆக.02-

'காவிரியின் குறுக்கே கர்நாடக அரசின் மேகேதாட்டு அணை கட்டுவதை அனுமதிக்காதே' என வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தஞ்சாவூர் தெற்கு மாவட்டக்குழு சார்பில் தஞ்சாவூர் தலைமை தபால் நிலையம் முன்பு இன்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




இந்த ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்ட செயலாளர் கோ. சக்திவேல் தலைமை வகித்தார். மாவட்ட துணை செயலாளர ராமச்சந்திரன், மாநில பொருளாளர் பாஸ்கர், மாநில குழு நிர்வாகி சந்திரகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில்,காவிரியின் குறுக்கே கர்நாடக அரசின் மேகேதாட்டு அணை கட்டுவதை அனுமதிக்க கூடாது.

மேகேதாட்டு அணை கட்டுவது தொடர்பாக தமிழகத்தின் உரிமையை பறிக்கின்ற வகையில் நாடாளுமன்றத்தில் பேசிய மத்திய நீர்வளத்துறை அமைச்சரை வன்மையாக கண்டிக்கிறோம்.

உச்ச நீதிமன்ற இறுதித் தீர்ப்பின்படி தமிழகத்துக்கு உரிய தண்ணீரை வழங்க வேண்டும். காவிரி டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதித்த பகுதியாக அறிவித்து நிவாரணம் வழங்க வேண்டும் என வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

பிரச்சினையின் பின்புலம்: கர்நாடக அரசு காவிரி ஆற்றின் குறுக்கே, மேகேதாட்டுவில் ரூ.9 ஆயிரம் கோடி செலவில் 67.14 டிஎம்சி கொள்ளளவுக் கொண்ட புதிய அணையைக் கட்ட முடிவெடுத்துள்ளது. இதை தமிழக அரசு எதிர்த்து வரும் நிலையில், கர்நாடக அரசு கடந்த 2018ம் ஆண்டு முதல்கட்ட திட்ட வரைவு அறிக்கையை மத்திய அரசிடம் சமர்ப்பித்தது. அதை பரிசீலித்த மத்திய நீர்வள ஆணையம், விரிவான திட்ட அறிக்கையைத் தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்டது. அதன்படி கடந்த 2019ம் ஆண்டு விரிவான திட்ட அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதில் கூறப்பட்ட தகவல்கள் காவிரி நடுவர் மன்றத்தின் தீர்ப்புக்கு முரணாக இருந்ததால், அதை திருத்தி வழங்குமாறு மத்திய நீர்வள ஆணையம் மீண்டும் உத்தரவிட்டது.

இதையடுத்து, கர்நாடக அரசு கடந்த ஏப்ரல் மாதம் திருத்தப்பட்ட விரிவான திட்ட அறிக்கையை மத்திய நீர்வள ஆணையத்திடம் சமர்ப்பித்தது. ஆனால், கர்நாடக அரசின் விரிவான திட்ட அறிக்கை ஏற்கப்படவில்லை என மத்திய நீர்வள ஆணையம் தெரிவித்தது.

காவிரியில் தமிழகத்துக்கு அடுத்த 15 நாட்களுக்கு வினாடிக்கு 3,500 கன அடி நீரை கர்நாடக அரசு திறந்து விட காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.



■ மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் அலுவலக செயல்பாடுகள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா ஆய்வு மேற்கொண்டார்.மேலும் அலுவலகத்தில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் வருவாய் தொடர்பான சேவைகள், மனுக்கள் மீதான நடவடிக்கைகள், பட்டா மாற்றம், முதியோர் உதவித்தொகை, சமூக பாதுகாப்புத் திட்டங்கள், வருமானம், இருப்பிடம், சாதிச் சான்றிதழ்கள் உள்ளிட்ட பல்வேறு சான்றிதழ்கள் வழங்கும் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தார்.




■ மதுரை மாநகராட்சி, மண்டலம் 2, அண்ணா நகர் பகுதியில் ஆணையாளர் கௌரவ் குமார், இ.ஆ.ப., அப்பகுதியில் உள்ள பேருந்து நிறுத்தத்தில் வைக்கப்பட்டுள்ள விளம்பர பதாகைகள் அனுமதி பெற்று வைக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.






■ நீலகிரி மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம் மூலமாக (NMBA ) போதை இல்லாத இந்தியா என்ற தலைப்பின் கீழ் சுமார் 150 மாணவ மாணவியர்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டது இதில் டாக்டர் அகிலா சைக்காலஜிஸ்ட் போதைப் பொருளால் ஏற்படும் தீமைகள் போதைப்பொருள் எவற்றை என்றும் அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறித்து தெளிவாக எடுத்துக் கூறினார் மேலும் மேலும் தன்னார்வு தொண்டு நிறுவனங்களில் அமைப்பாளர் மற்றும் அவர்களது குழு சார்பில் கேரியர் கைடன்ஸ் தலைப்பின் கீழ் மாணவ மாணவிகளுக்கு தேவையான வழிகாட்டு நெறிமுறைகள் மிகவும் துல்லியமாக எடுத்துரைக்கப்பட்டது மேலும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம் சார்பில் குழந்தை திருமணம் போதைப்பொருள் உபயோகித்தால் ஏற்படும் தீமைகள் மற்றும் அதனை தவிர்க்க கூடிய வழிமுறைகள் பற்றி எடுத்துரைக்கப்பட்டது இறுதியாக போதைப் பொருள் தடுப்பதை குறித்ததான உறுதிமொழி எடுக்கப்பட்டது.



■ தேனி மாவட்டம். போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியம். கோடாங்கிப்பட்டி ஊராட்சியில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் மூலம் போடி மீனவர் விவசாயிகள் உற்பத்தியாளர்கள் மற்றும் மீனவர் சங்கம் திறப்புவிழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், பங்கேற்று மீனவர் கூட்டுறவுச் சங்கத்தை திறந்து வைத்து பார்வையிட்டு, மீனவர்களின் வளர்ச்சிக்குச் சிறப்பாக செயலாற்றிட ஆலோசனை வழங்கினார். மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் மூலம் போடி மீன் விவசாயிகள் உற்பத்தியாளர்கள் மற்றும் மீனவர் சங்கத்திற்கு தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மூலம் ரூ.2 இலட்சம் நிதி வழங்கி அதன்மூலம் மீனவர்கள் மீன்பிடி தொழிலுக்கான உபகரணங்கள் வாங்கி, சங்கமூலம் மீனவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு விற்பனை செய்து அதன் மூலம் பொருளாதாரத்தை உயர்த்தி சங்கத்தின் வளர்ச்சிக்கு பயன்படுத்திக் கொள்ளும் வகையில் இதன் செயல்பாடு அமைந்துள்ளதாக மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது இந்நிகழ்ச்சியில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர்.சௌந்தரபாண்டியன் மற்றும் விவசாய சங்க பிரதி நிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## சிவகங்கை மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து அமைச்சர் டாக்டர் டி.கே. பிரபு ஆய்வு

சிவகங்கை, ஆக.2-

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் டாக்டர் டி.கே. பிரபு தலைமையில், மாவட்டத்தில் மேற்கொள்ள ப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், மாவட்டத்தில் நடைபெற்று வரும் அரசுத் திட்டப் பணிகளின் முன்னேற்றம், பொதுமக்களுக்கு சேவைகள் விரைவாக கிடைப்பதை உறுதி செய்தல் மற்றும் வளர்ச்சிப் பணிகளை துரிதப்படுத்துவது குறித்து அமைச்சர் விரிவாக ஆய்வு மேற்கொண்டு, சம்பந்தப்பட்ட அலுவலர் களுக்கு தேவையான அறிவுரைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ. குழந்தை ராணி நாச்சியார் (சிவகங்கை), ஆர். சீனிவாச சேதுபதி (திருப்பத்தூர்), டி. இளங்கோவன் (மானாமதுரை) உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





## ஸ்ரீ கெங்கையம்மன் ஆலயத்தில் ஆடிமாத தீமிதி திருவிழாவை முன்னிட்டு திருவிளக்கு பூஜை நிகழ்ச்சி

மாதவரம், ஆக.2-

மாதவரம் தொகுதி செங்குன்றம் அடுத்த பம்மதுகுளம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ கெங்கையம்மன் ஆலயத்தில் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் விழா மற்றும் 27க்ஷம் ஆண்டு தீமிதி திருவிழாவை முன்னிட்டு திருவிளக்கு பூஜை நிகழ்ச்சி ஆலய நிர்வாகிகள் செயலாளர் பத்மநாபன், பொருளாளர் துரை கனகவேல், துணைத் தலைவர் கனகராஜ், துணை செயலாளர் கர்ணால்சூரியா, கமிட்டி தலைவர் கவியரசன் மற்றும் ஆலய பூசாரி வளர்மதி, ஆன்மீக சேவகர்கள் அசோகன், ஏழுமலை, சேகர், ஜெயராமன், திரு மலை, கமிட்டி உறுப்பினர்கள் நாகராஜ், நந்தி,விஜயன். திருநாவுக்கரசு பன்னீர்தாஸ், சுரேஷ் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் அம்மனுக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் திருவிளக்கு பூஜையில் கலந்துகொண்டு உலக மக்கள் நன்மைகள் வேண்டியும் மற்றும் தங்க ளின் நேர்த்தி கடன் பூர்த்தி அடையவேண்டியும் மேளதாளத்துடன் அம்மன் மற்றும் பரிவார தெய்வங்களின் போற்றியுடன் சகஸ்ரநாமம் மந்திரங்களுடன் திருவினக்கு பூஜை நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ஆலய அனைத்துநிலை பொறுப்பாளர்கள். சுற்றுவட்டார பக்தர்கள் உள்ளிட்ட

கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு அன்னதாளம் மற்றும் மங்கள பொருட்கள் பிரசாதமாக வழங்கப்பட்டது.



## ஆடி 3வது வெள்ளி: பூங்காவனத்தம்மன் கோவிலுக்கு சீர் வரிசையுடன் பக்தர்கள் ஊர்வலம்

கிருஷ்ணகிரி, ஆக.2-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் சண்முக செட்டி தெருவைச் சேர்ந்த கொண்டை வீட்டு வகையறா குடும்பத்தினரைச் சேர்ந்த சுமார் 30க்கும் மேற்பட்டோர், ஆடி மாதத்தின் 3வது வெள்ளிக்கிழமையை முன்னிட்டு மலையாண்ட அள்ளியில் அமைந்துள்ள அருள்மிகு பூங்காவனத்தம்மன் திருக்கோவிலுக்கு சீர் வரிசைகளுடன் ஊர்வலமாகச் சென்றனர்.

பக்தர்கள் மேளதாளம் முழங்க, பக்தி பரவசத்துடன் கோவிலை அடைந்து, அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் மற்றும் தீபாராதனையில் பங்கேற்று வழிபட்டனர்.

விழாவில் கலந்து கொண்ட குடும்பத்தினர் அனைவரும் அம்மனின் அருளைப் பெற்று, தங்களது குடும்ப நலன், ஆரோக்கியம் மற்றும் வளமான வாழ்விற்காக பிரார்த்தனை செய்தனர். பக்தி உணர்வுடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஏராளமான உறவினர்கள் மற்றும் பக்தர்கள் கலந்து கொண்டனர்.

## நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு செய்திக்குறிப்பு

நீலகிரி, ஆக.2-

நீலகிரி மாவட்டத்தில் பொது விநியோகத்திட்டத்தின் கீழ் அத்தியாவசிய பொருட்கள் பெற்று வரும் அனைத்து குடும்ப அட்டைதாரர்கள் தங்கள் குடும்ப அட்டையில் உள்ள அனைத்து குடும்ப உறுப்பினர்களின் கைரேகை யினை தங்களது நியாயவிலைகடையில் உள்ள P.O.S இயந்திரத்தில் பதிவு செய்திட வேண்டும். நாளது தேதி வரையில் நியாயவிலைக் கடைகளில் eKYC மேற்கொள்ளாத அனைத்து குடும்ப அட்டை பயனாளிகளுக்கும் 02.08.2026 அன்று அனைத்து நியாயவிலைக் கடைகளில் சிறப்பு முகாம் நடைபெற உள்ளதால் இதனை பயன்படுத்திக்கொண்டு விற்பனை முனைய இயந்திரம் முலமாக விரல் ரேகை/கண் கருவிழி சரிபார்ப்பின் மூலம் eKYC மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. பிறமாநிலம், பிறமாவட்டங்களில் வேலை நிமித்தமாக தங்கி உள்ளவர்கள் அவர்களுக்கு அருகாமையில் உள்ள நியாயவிலை கடையில் குடும்ப அட்டை நகலுடன் சென்று கைவிரல் ரேகையினை பதிவு செய்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.



## நடை ரோந்து (Foot Patrolling) மூலம் குற்றங்கள் நடைபெறா வண்ணம் கண்காணிக்கும்

தேனி ஆக.2-

தேனி மாவட்ட காவல்துறையினர். பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கிலும் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் K.S.பிரவீன் கௌதம், உத்தரவின் பேரில், தேனி மாவட்ட காவல்துறையினர் தீவிர நடை ரோந்து (Foot Patrolling) பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்கள் அதிகம் கூடும் இடங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் முக்கிய சாலைகளில் காவல்துறையினர் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடை ரோந்து பணியின் மூலம் திருட்டு, வழிப்பறி, சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுத்து, சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.




## மாவட்ட ஆட்சியர் உத்தரவின் பேரில் ஆர் எஸ் மங்கலத்தில் சான்றுகள் பெற சிறப்பு முகாம்

ஆர் எஸ் மங்கலம். ஆக.02-

இராமநாதபுரம் மாவட்டம் ஆர் எஸ் மங்கலம் தாலுகாவிற்கு உட்பட்டு வசிக்கும் பொதுமக்கள் வாரிசு அடிப்படையில் பட்டா மாறுதல்கள் செய்வதற்கு இறப்பு மற்றும் வாரிசு சான்றுகள் பெற சிறப்பு முகாம் வருகின்ற 04 ம் தேதி மற்றும் 05 ம் தேதி ஆகிய நாட்களில் ஆர் எஸ் மங்கலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது .

மாவட்ட ஆட்சியர் சிவகுரு பிரபாகரன் உத்தரவின் பேரில் நடைபெறும் இந்த சிறப்பு முகாமில் பிறப்பு மற்றும் இறப்பு சான்று தேவைப்படும் பொது மக்கள் உரிய முறையில் விண்ணப்பிக்க தேவையான ஆவணங்களுடன் நேரில் வந்து முகாமில் கலந்து கொண்டு விண்ணப்பித்து சான்றிதழ்களை பெற்று பயனடைய வேண்டுமாய் வட்டாட்சியர் வரதன் கேட்டுக்கொண்டுள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161